**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – 2017ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவில் வழங்கப்படும் மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென சேவை புரிந்த நபர்கள் / நிறுவனங்களுக்கு தமிழக அரசு விருதுகள்– விருது வழங்கும் திட்டத்திற்கு தொடராணை மற்றும் ரூ.4,17,100/– நிதி ஒப்பளிப்பு– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண்.56

நாள்: 07–08–2017
ஹேவிளம்பி, ஆடி 22,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்கப்பட்டது:-

1. அரசாணை(1டி) எண்.55, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 03–08–2016.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் (மு.கூ.பொ.), ந.க.எண்.1626/ உ.உ–பிரிவு/2017, நாள் 14.06.2017.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில்,2016–2017 ஆம் நிதியாண்டில், 2016 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவில், மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென சேவைபுரியும் நபர்கள்/ நிறுவனங்களுக்கு தமிழக அரசு விருதுகளை வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும் அதற்கென செலவின தொகையாக ரூ.3,62,000/–ஐ நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மாற்றுத் திறனாளிகள் நலத்திற்காக சிறப்பாக பணியாற்றிய நபர்கள்/ நிறுவனங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது என்றும், 2017–2018 ஆம் நிதியாண்டில், சுதந்திர தின விழா அன்று மாற்றுத் திறனாளிகள் நலத்திற்கென சிறப்பாக பணிபுரியும் நபர்களுக்கு / நிறுவனங்களுக்கு கீழ்க்கண்டவாறு விருதுகளை வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

| வ. எண். | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் + ரூ.25,000/– ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ். |
| 2. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம். | 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் + ரூ.50,000/– ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 3. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவர். | 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ். |

| | | |
|---|---|---|
| 4. | மாற்றுத் திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் தொழில் அதிபர். | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 5. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறப்பு சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 6. | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |

3. மேலும், இந்நிதியாண்டில் இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தவும், மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென சிறப்பாக பணிபுரியும் நபர்களுக்கு / நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கிட ரூ.3,68,700/– மும், விவர கையேடு அச்சிடுதல் மற்றும் விளம்பர கட்டணத்திற்கு ரூ.48,400/– சேர்த்து, ஆக மொத்தம் ரூ.4,17,100/– வழங்கிடுமாறும், மேலும் விருது வாங்குபவர்கள் பற்றிய விவர கையேட்டினை அச்சிடுவதற்கு, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்குமாறும் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று,

(i) 2017–2018 ஆம் நிதியாண்டில், 2017 ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவில், மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென சேவைபுரியும் நபர்கள் / நிறுவனங்களுக்கு தமிழக அரசு விருதுகளை வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும் அதற்கென செலவின தொகையாக ரூ.4,17,100/–க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து பதினேழாயிரத்து நூறு மட்டும்) பின்வருமாறு செலவினம் மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது:–

| வ.எண். | செலவின விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | 10 கிராம் தங்கப்பதக்கம் (22 காரட்) 6 எண்ணிக்கை x ரூ.42,900/– | ரூ.2,57,400/– |
| 2. | சிறந்த தொண்டு நிறுவனத்திற்கான ரொக்கப் பரிசு (1 நிறுவனம்) | ரூ.50,000/– |
| 3. | சிறந்த மாவட்ட ஆட்சியருக்கான ரொக்கப் பரிசு | ரூ.25,000/– |
| 4. | தேர்வுப் பட்டியல், சான்றிதழ் தயாரித்தல் மற்றும் இதர செலவினங்கள் | ரூ.36,300/– |
| 5. | விருது வென்றவர்கள் பற்றிய கையேடு அச்சிடுதல் | ரூ.48,400 /– |
| | மொத்தம் | ரூ.4,17,100/– |

(ii) விருது வாங்குபவர்கள் பற்றிய விவர கையேட்டினை, குறைந்தபட்ச விலைப்புள்ளி அளிக்கும் நிறுவனம் மூலம் அச்சிடுவதற்கு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

(iii) இதன் பொருட்டு அரசாணை(நிலை) எண்.78, நிதித்(வ.செ. பொது.1) துறை, நாள்30–03–2017ல் வெளியிடப்பட்ட 2017–18ஆம் ஆண்டுக்கான காலாண்டு நிதியொதுக்கக் கட்டுப்பாட்டு முறையிலிருந்து விலக்களித்தும் அரசு ஆணையிடுகிறது.

**5.** (அ) மேலே பத்தி **4(i)** இனம் **1**லிருந்து **4** வரை ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.**3,68,700/–** (ரூபாய் மூன்று இலட்சத்து அறுபத்து எட்டாயிரத்து எழுநூறு மட்டும்) பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"**2235–** சமூகப் பாதுகாப்பும் நலனும்–**02**–சமூக நலன் –**001**–நெறிப்படுத்தலும் நிருவாகமும்– மாநிலச் செலவினங்கள் AF- மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம் – **59**–பரிசுகளும் வெகுமதிகளும்"
(து.தொ.கு. **2235 02 001** AF 5906)

ஆ) மேலே பத்தி **4(i)** ல் இனம் **5**–ல் குறிப்பிட்டுள்ள விருது பெறுபவர்கள் பற்றிய கையேடுகளை குறைந்த விலைப்புள்ளி வழங்கும் தனியார் அச்சகம் மூலம் அச்சிடத் தேவையான ரூ.**48,400/–** (ரூபாய் நாற்பத்து எட்டாயிரத்து நானூறு மட்டும்) பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"**2235–** சமூகப் பாதுகாப்பும் நலனும்–**02**–சமூக நலன் –**001**–நெறிப்படுத்தலும் நிருவாகமும்–மாநிலச் செலவினங்கள் AF- மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம் –**08**– விளம்பரமும் பிரச்சாரமும்–**01** விளம்பரக் கட்டணங்கள்"
(து.தொ.கு. **2235 02 001** AF 0812)

**6.** மேலும் முன்பக்கம் பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் இச்செலவினத்தை மேற்கொள்ள வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.**41532**/நிதி[JS(KM)] /**2017**, நாள்**04.08.2017**ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ.)**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–**5.**
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–**35.**
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–**18.**
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை– **18** (பெயரில்)

**நகல்:**
நிதி (சந)த் துறை, சென்னை–**9.**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–**9.**
முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–**9.**
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–**9.**
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.